**சிலாபம் பிரதேச சபை - 2023**

----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சிலாபம் பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல், உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு (பொருத்தமான வகையில்) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளளவாறான சிலாபம் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு (பொருத்தமானவாறு) இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாணடின் கடைசி நாளில் உள்ளவாறு ரூபா 97,800 பெறுமதியான 04 சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஊழியர் கடன் கணக்கு ரூபா 117,000 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (இ) | ரூபா 5,874,430 பெறுமதியுடைய 05 கைத்தொழில்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஈ) | 11 பேர்ச் காணிகளில் வீதிகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 1,415,000 தொகையான உரித்துறுதிகள் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. ய 05 கைத்தொழிலாளர்கள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 05 கணக்கீட்டு தலைப்புகளின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டியலிற்கும் இடையில் ரூபா | 2023 ஆம் ஆண்டில் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பட்டியல் மீதி மற்றும் கணக்கு மீதிகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

20,138,990 மொத்தமான வித்தியாசங்கள் இருந்தது.

### 1.6.3 தொங்கல் கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 62,837 ஆன நிலுவையாக இருக்கின்ற வரவு மீதியுடன் தொங்கல் கணக்கு இருந்தது. | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளேட்டு பதிவுகள் ஊடாக திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலீச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i). நி.பி 371 (இ) | ரூபா 162,801 மொத்தப் பெறுமதியுடைய 05 முற்பணங்கள் உரய வேலைகள் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீரப்பனவு செய்யப் பட்டிருக்கவில்லை. | முற்பணங்கள் உரிய வேலைகள் பூர்த்தியான பின்னர் விரைவாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டுமென எழுத்து மூலம் தெரிவிக்கப் பட்டிருந்தது. | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii). பிரிவு 571(2) | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் 02 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 4,064,973 பெறுமதியான 170 வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| பிரிவுகள் 129(2)(ஆ) மற்றும் (ஊ) | நீதி மன்ற தண்டப்பணம் முத்திரை வரி மற்றும் குத்தகை வாடகைகள் முறைப்படி கேரிக்கப் பட்டிருக்கவில்லை. | முத்திரை வரி குத்தகை வாடகைகள் மற்றும் நீதி மன்ற தண்டப்பணம் முறைப்படி | அதிகாரச்சட்த்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சேகரிப்பதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | |
| (இ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதிகள் | | | |
| (i) விதி இல. 5(7) | போதிய உள்ளக கணக்காய்வு முறைமை நிதி மற்றும் காட்சி அறைச் செயற்பாடுகள் தொடர்பில் பேணப் பட்டிருக்கவில்லை. | அந்த உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் சகல நோக்கங்களையும் மேவுவதற்கு கையேற்கப்பட்டிருந்தன. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) விதி இல. 217 | சபையால் பயன்படுத்தப்பட மற்றும் அமைந்திருக்கின்ற காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான சகல பதிவுகளும் நாளது வரை பேணப்பட்டிருககவில்லை | பதிவேட்டை பேணுவதறகு நடவடிக்கை எடுக்கப்படும். | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) விதி இல. 218 | சகல காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பிலும் ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு தடவை பரிசோதனை சபையால் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அத்தகைய பரிசோதனைகள் எதுவும் செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலததில் பரிசோதனைக் குழுவை நியமித்து களப் பரிசோதனை நடாா்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 144,347,101 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 87,785,753 ஆகும்.

### 2.2. வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப் பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறா ன மொத்த நிலுவை |
| ---------------- | ----------- | --------- | -------- | --------- | ---------- | -------- | ------- | ------- |
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| வீதவரியும் வரியும் | 33,534 | 11,392 | 11,667 | 4,667 | 9,393 | 11,352 | 9,331 | 5,096 |
| வாடகை | 9,625 | 9,215 | 9,342 | 4,388 | 10,153 | 11,904 | 9,755 | 3,041 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,050 | 1,132 | 1,132 | - | 1,380 | 980 | 980 | 360 |
| ஏனைய வருமானம் | 12,177 | 10,202 | 32,695 | 128 | 37,641 | 11,384 | 11,263 | - |
| மொத்தம் | 56,386 | 31,941 | 54,836 | 9,188 | 9,182 | 35,620 | 31,329 | 8,497 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,352,640 தொகையான வீத வரி நிலுவைகள், ரூபா 314,759 தொகையான ஏக்கர் வரிகள் மற்றும் ரூபா 4,388,406 தொகையான வாடகை நிலுவைகள் என்பன அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலக்கிரமத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறவேண்டிய தொகைகளை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு கிடைக்க வேண்டிய நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரை வரி என்பன முறையே ரூபா 136,744,037 மற்றும் ரூபா 309,467,505 என்பன பிதம செயலாளரிடமிருந்து அறவிட வேண்டியிருந்தது. அதில், 01 ஆண்டிற்கு குறைவான நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 40,500,000 ஆக இருந்த அதேநேரம் 01 ஆண்டிற்கு குறையவும் 03 ஆண்டுகளிற்கு மேலாகவும் ரூபா 96,244,037 இருந்த அதேநேரம் 01 ஆண்டிற்கு குறையவும் 03 ஆண்டுகளிற்கு மேலாகவும் ரூபா 110,000,000 இருந் அதேநேரம் 03 ஆண்டுகளிற்கு மேலாக ரூபா 199,467,506 இருந்தது. | சரியாக நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நீதி மன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரை வரி என்பவற்றின் நிலுவை விரைவாக அறவிடுவதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2023 யூன் 30 இல் உள்ளவாறு முனீஸ்வரம் சமய வழிபாட்டு மண்டபம் 03 ஆண்டு காலப் பகுதிக்கும் மேலாக குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் நிலுவையாக இருக்கின்ற வாடகை வருமானம் ரூபா 1,633,764 ஆக இருந்தது. குத்தகை | அவசியமான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் 04 பிரிவின் பிரகாரம் வாடகை செலுத்தப் பட்டிருக்காவிடின் குத்தகை உடன்படிக்கை இரத்து செய்ய முடிந்த போதிலும் இது அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மாதம்பே சுற்றாடல் தகவல் நிலையத்தின் மேல் மாடி ரூபா 444,000 தொகைக்காக 02 ஆண்டுகளிற்கு மேலாக குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் அளவில் நிலுவையாக இருக்கின்ற தொகை ரூபா 164,320 ஆக இருந்தது. பணத்தினை செலுத்தாமையால் ஒப்பந்தத்தை இரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகள் அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | நிலுவைகள் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2013 இன் 01 ஆம் இலக்க சமுதாய அடிப்படை அமைப்புக்களின் (நீர் மற்றும் சுற்றாடல் சுகாதாரம்) தாபிப்பு மற்றும் பிரமாணப்படுத்தல் கட்டளை பட்டயம் வழங்கப்பட்டிருந்ததுடன் இதன்படி பதிவுசெய்யப்பட்ட சமுதாய அடிப்படை அமைப்புகளின் கண்காணிப்பு, விசாரணை மற்றும் செயற்பாடுகளில் ஆலோசனை வழங்கல், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் அதிகாரம் நிறுவனத்திற்கு சொந்தமான சொல்லப்பட்ட சமுதாய சங்கத்தின் தாபிப்பு அமைந்திருந்த உள்ளூராட்சி அமைப்புக்களிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. 15 சமுதாய அடிப்படை அமைப்புக்கள் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் சமுதாய அடிப்படை அமைப்புக்களின் பல்வேறு முறையீனங்கள் மற்றும் பிரச்சனைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | செயற்பாட்டில் உள்ள அமைப்புகள் மாத்திரம் பதிவு செய்ய வேண்டியிருந்தது. | சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தாபிப்பு குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | (i). 09 கைத்தொழில் தொடர்புபட்ட 186 வியாபாரிகள் 2019 முதல் 2023 வரையான காலத்தின் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களை பெறப் பட்டிருக்காததுடன் இது தொடர்பில் சபையால் தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில் உரிமையாளர்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தைப் பெறுகின்றனர். | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு கைத்தொழிலாளர்கள் நெறிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | (ii). 1990 இன் 12 ஆம் இலக்க வடமேல் மாகாண சுற்றாடல் நியதியின் 21(1) ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட கழிவு பரிசோதனை / கழிவகற்றல் என்பவற்றிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதியின் பொது நிபந்தகைளின் பிரகாரம் அனுமதிப் பத்திரங்கள் பெறப்பட்டிருக்காததினால் 71 வழக்குகள் உள்ளன. | கைத்தொழில் உரிமையாளர்கள் உரிய நேரத்தில் அனுமதிப் பத்திரத்தைப் பெறுவது அத்தியாவசியமாக உள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | நியதிச்சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | முன்னைய ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருக்காத கைத் தொழில்களின் கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 32,079,400 ஆக இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 வரை 05 கைத்தொழில்கள் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழில்களை பூர்த்தியாக்கவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கைத்தொழில்களை செயற்படுத்துவதற்கு அல்லது அவர்கள் செயற்பாடற்று இருப்பின் கடன்கொருத்தேரில் இருந்து அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் அறவிட வேண்டியிருந்த கணக்குகளின் மீதி ரூபா 19,726,708 ஆக இருந்ததுடன் இது 03 ஆண்டுகளை விஞ்சியிருந்த ரூபா 1,711,608 ஆன மீதியை கொண்டிருந்தது. | அறவிடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உடனடியாக நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் செலுத்த வேண்டியிருந்த கணக்குகளின் அதிகமாக இருந்தவை ரூபா 107,937,367 ஆக இருந்ததுடன் இது 03 ஆண்டுகளை விட அதிகமானவை ரூபா 4,741,372 ஆகும். | தீர்ப்பனவு செய்வதற்கு மேலும் நடவடிக்கை எடுக்கப்படும். | உடனடியாக கடன்கொடுத்தோரை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 சனவரி 10 ஆந் திகதிய 2019/02 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கைக்கு முரணான பழைய மதிப்பாய்வில் 29 கடைகளிற்கு வாடகை சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது. | புதிய மதிப்பாய்விற்காக கடைகளை தொடர்பு படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பாய்வை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாக பயன்படுத்திய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 40 துண்டு அரச காணிகளின் தென்னை பயர்ச் சொய்கைக்கு குத்தகைக்கு விடுவதற்கு நடவடிககை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குத்தகைகளை வெளிப்படுத்தாமையால் நிறை வேற்றப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்களில் இருந்து அதிகூடிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சயையின் அதிகார எல்லைக்குள் 43 சுவீகரிக்கப்படாத காணிகள் இருந்ததுடன் அவற்றினை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த காணிகளை கையேற்பதற்கு அவசயமான படிமுறைகள் எடுக்கப்படும். | உரிய ஆதனங்களின் சட்ட உரிமையயை கையேற்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு மாற்றப்பட்ட 40 அரச காணிகள் காணி துண்டாக்கும் பொது பாதுகாப்பு எல்லைகள் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.. | சபையின் பெயர் பலகை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. | சபையின் பெயர் பலகை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | புலத்தண்டிய ரத்மலாகரவில் தரிசு நிலத்தில் பிரதேச சபையால் உடமையாக்கப்பட்ட 40 பேர்ச் காணிகள் உறுதிப் படுத்தப்பட்டிருக்கவில்ல. | விடய உத்தியோகத்தரால் சபைக்கு காணி வழங்கப்பட்டிருந்ததென விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான காணிகளை சரியாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | வல்பொத்தியாய அல்லது புளியங்கரவர என அழைக்கப்பட்ட 9 ஏக்கர், 1 றூட் 15 பேர்ச் காணியின் பிரிவு தொடர்பில் வழங்கப்பட வேண்டியிருந்த 1 சதவீத வாடகை வழங்கப்பட்டிருக்காததுடன் பொதுவான துண்டுகளிற்காக உறுதிகள் வழங்கப்பட்டிருந்தது. | காணிப் பிரிவிலிருந்து அறவிடப்பட வேண்டியருந்த சபைக்கு வழங்கப்பட்ட 1 சதவீத வரி அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். | உடனடியாக 1 சதவீத வரியை அறவிடப்பட வேண்டும். |
| (உ) | கஹட்டகவத்த அல்லது கொரஹகவத்தவின் பிரிவிற்காக 2022 ஆம் அண்டில் 07 ஏக்கர், 1 றூட் 12.4 பேர்ச் பரப்பளவுடைய காணியின் தொடர்பில் அனுமதி வேண்டியிருந்ததுடன் தற்போது வரை வேண்டப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாமையால் அனுமதி வழங்கப்பட்டிருக்காததுடன் 1 சதவீத வரியை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரித் தொகை உடனடியாக அறவிடுவதற்கு நடவக்கை எடுக்கபடும். | உடனடியாக 1 சதவீத வரியை அறவிடப்பட நடவடிக்கை வேண்டும். |
| (ஊ) | பிரிக்கப்பட்ட பின்னர் சபைக்கு சொந்தமாக இருந்த 373 பேர்ச் பொதுக்காணித் துண்டுகளை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்காததுடன் பிரதேச சபை அதிகார எல்லைக்குள் உறுதியுடன் உடமையாக்கப்பட்ட திட்டக்கடே கல (மைட்டி உயன) விற்பனை செய்யப்பட்டது. | சாத்தியமானளவு விரைவாக உறுதியை பெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். | சொந்தமான காணிகள் தொடர்பில் உறுதியை பெறுவதற்கு உடனடியாக ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். |

### 3.5 செயற்திட்ட நடவடிக்கைகள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டில் வேலையை தொடங்கியிருக்காத 56 கைத்தொழில்களின் ஒப்பந்த பெறுமதி ரூபா 37,874,138 ஆக இருந்தது. | வேலையை பூர்த்தியாக்குவுதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளப்படும் | உரிய ஆண்டில் பூர்த்தியாக வேண்டுமென திடமிட்ட கைத்தொழில்க்ள் அதே ஆணடில் பூர்த்தியாக்கப்பட வேண்டும். |

### 3.6 கொள்வனவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 01/2021 அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டில் சமுதாய அடிபபடை அமைப்புகளால் 104 கைத்தொழில்களை செய்படுத்தல் கொள்வனவு வழிகட்டலின் 1.2 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கான கொள்வனவு நடைமுறையிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட சாதகமான நிலையை பெறுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் சமுதாய அடிபபடை அமைப்புகளால் கைத்தொழில்களை நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது | கொள்வனவு வழிகாட்டலை பின்பற்றி போட்டி விலையில் ஒப்பந்தகாரருக்கு உரிய கைத்தொழிலை வழங்குவத்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.7 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டில் புளியங்கண்டாவிலுள்ள செல்வின்வத்தை விளையாட்டு மைதானத்தில் ரூபா 199,288 ஆன தொகைக்கு புதிய கவரை செய்வதற்காக சித்த சமுர்த்தி முதியோர் சஙகத்துடன் ஒப்பந்தம் செய்திருந்ததுடன் முழு வேலைகளும் மதிப்பீட்டின் பிரகாரம் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | கைத்தொழிலை பூர்த்தியாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. | அரசாங்க நிதிகளை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் 17 இரண்டாம் நிலை பதவிகள் மற்றும் 37 ஆரம்ப நிலைப் பதவிகள் வெற்றிடமாக இருந்தது அதேநேரம் 16 இரண்டாம் நிலைக் பதவிகள் மற்றும் 27 ஆரம்ப நிலைப் பதவிகள் மிகையாக இருந்தது. | வேண்டுகை செய்யப் பட்டிருந்ததுடன் நாங்கள் முறையான பதில் பெற்றிருக்கவில்லை. | சபைக்கு தேவையான ஊழியர் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அந்த ஊழியர்கள் சீரக்குவதற்கு அளவீடுகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் வேலையை விட்டுச் சென்றிருந்த, இடைநிறுத்தப்பட்ட மற்றும் இடமாற்றம் பெற்றிருந்த 48 | போட்டியாளர் உத்தியோகத் தரிடமிருந்து உரிய பணத்தை சேகரிப்பதற்கு | நிலுவையாக இருக்கின்ற கடன்களை அறவிடுவதற்கு |

| | | |
|---|---|---|
| ஊழியர்களிடமிருந்து ரூபா 335,560 சேகரிக்கப்பட வேண்டியிருந்தது. | நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.9 வாகனத் தொகுதியின் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கலவத்த உள்ளூராட்சிக்கு சொந்தமான வாகன விபத்து காரணமாக ரூபா 373,630 ஆன நட்டம் 2023 நவம்பர் 15 அளவில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2028 சனவரி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு மதிப்பீடகள் மூலம் 34 கருத்திட்டங்கள் தொடர்பில் மீளாய்வாண்டில் செய்யப்பட்ட ரூபா 16,116,000 ஆன முழு ஏற்பாடும் தொடர்புடைய பாதிடப்பட்ட பணிகளை அடைவதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் அதிக கவனம் எடுக்கப்படும் அதேநேரம் எதிர்காலத்தில் பாதிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குகின்றது. | செயற்பாட்டு நடவடிக்கைகளை பாதிடப்பட்ட இலக்கினை அடையும் நோக்கில் திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | மேலும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டு தொடர்பில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளிற்காக 30 கருத்திட்டங்களிற்காக செலவழித்த தொகை 50 சதவீதத்திற்கு குறைவாக இருந்தது. | இது தொடர்பில் அதிக கவனம் எடுக்கப்படும் அதேநேரம் எதிர்காலத்தில் பாதிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை அமுலாக்குகின்றது. | செயற்பாட்டு நடவடிக்கைகளை பாதிடப்பட்ட இலக்கினை அடையும் நோக்கில் திட்டமிடப்பட வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது சிலம்பலகஸவேல நெல் வயலில் பம்பல இரயில் மதகுக்கு அருகில் கால்வாயின் அத்துமீறிய நிர்மாணத்துடன் கையாள்வதற்கு தவறியிருந்தது. | சாத்தியமானளவு விரைவில் இந்த விடயத்தை தீர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். | இந்த விடயத்தை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 4. 3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | செயலாளரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சபையானது 10 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை இனங்கண்டதுடன் 2023 ஆம் ஆண்டின் பொது அந்த இலக்குகளில் 19 நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. அந்த நடவடிக்கைகளில் 25 முழுமையாக பூர்த்தியாக்கப்ப ட்டிக்காததுடன் அந்த 13 நடவடிக்கைகளின் முன்னேற்றம் 49 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | எதிர்காலத்தில் பல சந்தர்ப்பங்களில் நிலைபேறான அபிவிருதி இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருதி நோக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கு நடவடிக்கைகள் எ:டுக்கப்பட வேண்டும். |